International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 02 April to June 2020 www.irjtsjournal.org

# சோழத் திருநாட்டில் வைணவம்

**மு.கயல்விழி,**

*உதவிப்பேராசிரியர்,*

*தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி,*

*காஞ்சிபுரம்-631502.*

முன்னுரை:

சைவமும், வைணவமும் இந்து சமயத்தின் இரு கண்களாகும். வைணவம் திருமாலை வழிபடு தெய்வமாகக் கொண்டது. தமிழர்கள் வைணவத்தைச் சங்க காலம் தொட்டே போற்றி வந்துள்ளனர். திருமால் மாயோன், மாயவன், மாயன் என்றெல்லாம் சங்க இலக்கியங்களால் அழைக்கப்பட்டான். சங்க காலத்துப் பின் வந்த பல்லவர் காலத்தில் இவ்வழிபாட்டு முறையானது முழுமையடைந்தது. வைணவ சமயம் அதன் பின் வந்த சோழர் காலத்தில் தன் பொற்கால நிலையை எட்டியது. வைணவத்தை வளர்த்த ஆழ்வார்கள் பெரும்பான்மையானோர் பல்லவர் காலத்தில் வாழ்ந்திருந்தாலும் அவர்களின் பாக்கள் யாவும் சோழர் காலத்தில்தான் தொகுக்கப்பட்டன. மேலும் பல புதிய வைணவ ஆலயங்கள் இக்காலத்தில்தான் கட்டப்பட்டன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும் போது வைணவ சமயம் சோழர் காலத்தில்தான் முன் எப்போதும் இராத வளர்ச்சியடைந்தது உறுதியாகின்றது. தீவிர சைவர்களான சோழ மன்னர்கள் வைணவத்தை முனைப்புடன் ஆதரித்துப் போற்றியது வரலாற்றில் வியப்புக்குரிய நிகழ்வாகும். தமிழர்கள் சமயப் பொறை மிக்கவர்கள் என்ற கூற்றை நிருபிக்கும் செயலாகவே இதைக் கொள்ளவேண்டும். சோழ மன்னர்களின் மட்டற்ற ஆதரவால் வைணவ சமயம் தன் சிறப்பான பொற்கால நிலையை எட்டிற்று.

சோழ மன்னர்களின் வைணவ ஆதரவு:

சோழ மன்னர்கள் சைவ சமயப் பற்றாளர்கள். “திருநீற்றுச் சோழன்” என்று பெயர் பெருமளவிற்குச் சைவ சமயப் பற்றாளர்கள். ஆனால் மன்னர்கள் என்ற நிலையில் சைவத்தைப் போன்றே வைணவத்தையும் அவர்கள் நன்கு ஆதரித்துப் போற்றினர். அவர்கள் புதிய வைணவ கோயில்களை நாடு முழுவதும் கட்டியதுடன் ஏற்கனவே உள்ள ஆலயங்களுக்கு நிவந்தங்களை வாரி வழங்கினர். சைவ இலக்கியங்களை நூலாய்த் தொகுத்தது போன்றே வைணவ இலக்கியங்களையும் தொகுத்துப் பாதுகாத்தனர். பல சோழ மன்னர்களின் பட்டப் பெயர்களும், மெய்க்கீர்த்திகளும் அவர்களின் வைணவப் பற்றினைப் பறைசாற்றின. முதலாம் பராந்தக சோழன் “வீர நாராயணன்” என்ற பெயரைக் கொண்டதுடன், கடலூர் மாவட்டத்தில் தான் வெட்டிய மிகப்

பெரிய ஏரிக்கு “வீர நாராயணன் ஏரி” என்று பெயர் சூட்டி மகிழ்ந்தான். கண்டராதித்த சோழன் திருமாலின் மீது பேரன்பு கொண்டு தஞ்சையில் “கண்டராதித்த விண்ணகர்” என்ற வைணவ ஆலயத்தை அமைத்தான்.[1] புகழ் பெற்ற முதலாம் இராஜராஜ சோழன் திருவாய்மொழியை பல ஆலயங்களில் ஓத ஏற்பாடு செய்ததால் “திருவாய்மொழித் தேவன்” என்று சிறப்பிக்கப்பட்டான்.[2] அவனது மகனான முதலாம் இராஜேந்திர சோழன் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் உள்ள பெருமாள் ஆலயத்தில் திருவாய் மொழியை ஓதுவதற்கும்,[3] திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தில் திருப்பள்ளி எழுச்சி பாடவும் ஓதுவர்களை நியமித்தான்.[4]

அவனைத் தொடர்ந்து வந்த அதி ராஜேந்திரன் விழுப்புரம் மாவட்டம் திருவக்கரையில் உள்ள சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தில் திருமாலுக்கென்று தனி ஆலயம் அமைத்தான்.[5] மும்முடிச் சோழன் என்றழைக்கப்பட்ட முதலாம் குலோத்துங்க சோழன் திருவரங்கம் கோவிலுக்குத் திருப்பணி செய்ததுடன் பொன்னாலும், மணியாலும் செய்த அரவணையை திருமாலுக்கு வழங்கி தன் பக்தியை வெளிப்படுத்தினான். இதே மன்னன் புகழ் பெற்ற மன்னார்குடி இராஜகோபால ஸ்வாமி ஆலயத்தையும் கட்டினான். இது “குலோத்துங்க சோழ விண்ணகர்” என்ற பெயரால் அழைக்கப்பட்டது.[6] இவன் முடிசூடிய பொழுது “சப்தம விஷ்ணு வர்த்தனன்” என்ற பட்டப் பெயருடன் முடிசூடி தன் வைணவப் பற்றினை உலகிற்குக் காட்டினான்.

“திருமகலோகத்து ப்ரியா”

மற்றும்

“திருமகளிருந்தென வீர சிம்மாசனத்து
உலக முடையாளோடு வீற்றிருந்தருளிய”

போன்ற இவனது மெய்க்கீர்த்திகள் இவனின் வைணவப் பற்றை புலப்படுத்தும். இவனது மகனான விக்கிரம சோழனும் வைணவப் பற்றாளனாகத் திகழ்ந்தான். இதை

“நெடுமால் ஆகத்து பொருந்திப் பிரியாது”

மற்றும்

“திருமகள் இருந்தென்”

போன்ற இவனது மெய்க்கீர்த்திகள் உணர்த்தும். இரண்டாம் குலோத்துங்கன் புகழ் பெற்ற திருக்கோவிலூர் திருமால் ஆலயத்திற்கு மானியங்கள் வழங்கிச் சிறப்பித்தான்.[7] இவனது மெய்க்கீர்த்தியான

"நெடுமாலிவனென நெடுமுடி சூடி"

என்பது இவனது வைணவப் பற்றை எடுத்துக்காட்டும்.

அதன் பின் வந்த இரண்டாம் இராஜாதிராஜன் வைணவ ஆலயங்களில் திருவாய் மொழி, திருத்தாண்டகம் போன்ற பாக்களை தினமும் ஓத ஏற்பாடு செய்தான்.[8] அவன் காலத்தில் தான் காஞ்சி வரதர் கோயிலில் திருவாய் மொழி பாசுரங்கள் சிறப்புடன் ஓதப்பட்டன.[9] சோழ மன்னர்களைத் தவிர அந்நாட்டுச் சிற்றரசர்களும் வைணவத்தை நன்கு வளர்த்தனர். இராஜேந்திர சோழ மாவலிவாணராயன் எனற சிற்றரசன் பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள திருபுவணிக் கோவிலுக்கு 1200 கலம் வருவாய் உள்ள 72 வேலி நிலத்தை தானமாக வழங்கினான். இவன் காலத்தில் தான் விழுப்புரம் மாவட்டம் எண்ணாயிரத்தில் "வீரநாராயணன் விண்ணகர்" என்ற திருமால் ஆலயம் கட்டப்பட்டது.[10] அங்கு ஒரு வைணவக் கல்லூரியும் இவனே ஏற்படுத்தியளித்தான். திருக்கோவிலூர் மலையமான் மிலாடுயுடையான் நரசிம்மன் என்பவன் திருக் கோவிலூரில் ஒரு வைணவ ஆலயத்தைக் கட்டினான்.[11]

வைணவத் திருமடங்களின் பணிகள்:

சோழர் காலத்தில் வைணவ சமயத்தை வைணவ ஆலயங்களுடன் சேர்ந்து வைணவ மடங்களும் நன்கு வளர்த்தன. நாட்டின் பல பகுதிகளில் செயல்பட்ட இத்திருமடங்கள் வைணவ சமயத்திற்கு அளவற்ற சேவை புரிந்தன. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் தஞ்சையில் "அரிக்கேசவன் மடம்" என்ற மடம் சிறப்பாக வைணவச் சேவை புரிந்தது.[12] காஞ்சிபுரத்தில் வைஷ்ணவதாசன் என்பவன் ஏற்படுத்திய வைணவ மடமானது இராமானுஜ ஆச்சாரியரின் கருத்துக்களைப் பரப்பிவந்தது.[13] இதன் தலைவராகப் "பிரண்மதந்திர ஸ்வதந்திரர்" என்ற அறிஞர் பணியாற்றி வந்தார். வானமாமலையில் ஒரு வைணவ மடம் அக்காலத்தில் சிறப்புடன் செயல்பட்டு வந்தது.[14] அது இன்று வரை செயல்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. மன்னார்குடியில் இராஜகோபால ஸ்வாமி ஆலயத்துடன் "செண்டலங்கார மாமுனி மடம்" என்ற வைணவ மடம் ஒன்று இயங்கி வைணவ சேவை புரிந்தது. இது தவிர சேரன்மா தேவியிலும் மற்றொரு வைணவ மடம் செயல்பட்டதைச் சான்றுகள் உணர்த்தும்.[15]

வைணவ இலக்கியங்களின் வளர்ச்சி:

சோழர் காலத்தில் வைணவ இலக்கியங்கள் நன்கு வளர்ச்சியுற்றன. வைணவம் வளர்த்த ஆழ்வார்கள் பாடிய தெய்வீகப் பாடல்கள் "திவ்வியப் பிரபந்தங்களாக" இக்காலத்தில்தான் தொகுக்கப்பட்டன. இதை நாதமுனி (கி.பி.823-951) என்ற பெரியார் தொகுத்தளித்தார். சோழர்களின் அன்பில் செப்பேடுகளில் சிறப்பிக்கப்படும் "ஸ்ரீநாதன்" என்பவர் இவரே என்று ஆய்வாளர்கள்

கருதுகின்றனர்.[16] மாமன்னன் இராஜராஜன் இவரை திருக்குருகூர் அனுப்பி நம்வாழ்வார் மற்றும் மதுர கவியாழ்வாரின் பாசுரங்களைக் கொணரச் செய்தான். பின்னர் பிற ஆழ்வாழ்களின் பாக்களைத் தொகுத்து திவ்வியப் பிரபந்த நூலாக்கி உலகிற்கு அளித்தான். தாம் தொகுத்த பாக்களுக்கு நாத முனிகளே சிறப்பாக இசை வகுத்தளித்தார்.[17] அக்காலம் தொட்டு வைணவ ஆலயங்கள் தோறும் தமிழ்ப் பாக்களான திவ்யப் பிரபந்தங்கள் இசையோடு ஓதப்பட்டன. புகழ்ப் பெற்ற வைணவ ஆச்சாரியரான இராமானுஜர் "வேதாந்த சங்கிரகம்" "ஸ்ரீபாஷ்யம்" "கீதா பாஷ்யம்" போன்ற நூல்களை உலகிற்கு அளித்ததும் இக்காலத்தில் தான்.

சோழர் காலத்தில் திவ்வியப் பிரபந்தங்களுக்கு மணிப்பிரவாள நடையில் (தமிழும், வடமொழியும் கலந்து) உரையெழுதப்பட்டது. இவற்றை வைணவச் சான்றோர்களான பெரிய வச்சான் பிள்ளை (கி.பி.1228-) நம் பிள்ளை (கி.பி.1205-1311), போன்றோர் ஆக்கியளித்தனர். இவற்றை "ஈடுகள்" என்று குறிப்பிடுகின்றனர். சிறப்பாகத் திருவாய் மொழிக்கு குறுகைப் பிரான் பிள்ளான் என்ற வைணவப் பெரியார் "ஆறாயிரம் படி" என்ற விளக்க உரையை எழுதினார். இதே நூலுக்கு மற்றொரு வைணவ அறிஞரான கோனேரி தாசன் என்பவர் சிறப்பான உரையொன்றை வகுத்தார். திருவரங்கத்தைச் சார்ந்த அமுதன் என்பவன் ஸ்ரீ இராமானுஜரைப் போற்றி "இராமானுஜ நூற்றந்தாதி" என்ற நூலை இயற்றினார்.[18] இது கலித் துறையில் நூறு பாக்களைக் கொண்டதாகும். இந்நூல் வைணவ இல்லங்கள் தோறும் தினமும் ஓதப்பட்டதால் "பிரபன்ன காயத்திரி" என்று பெயர் பெற்றது. சோழர் காலத்தில்தான் மிகப் பெரிய வைணவப் பண்டிதரான வேதாந்த தேசிகர் (கி.பி.1268-1369) வாழ்ந்தார். அவர் வடமொழி மற்றும் தென்மொழிக் கடலாகத் திகழ்ந்தார். இவர் தமிழில் 24 பிரபந்தங்களையும், வட மொழியில் 84 பிரபந்தங்களையும் இயற்றி வைணவத்திற்கு மாபெரும் சேவை புரிந்தார். இவரே வைணவத்தில் வடகலைப் பிரிவு தோன்றுவதற்கும் காரணமாய் அமைந்தார்.

ஆச்சாரியர் இராமானுஜர்:

வைணவ சமயத்தின் பிதாமகரான இராமானுஜர் (கி.பி.1017-1157) காஞ்சிக்கு அருகில் உள்ள ஸ்ரீ பெரும்புதூரில் அவதரித்தார். சிறுவயதிலேயே காஞ்சிபுரம் சென்று மாதவ பிரகாசர் என்பவரிடம் அத்வைதக் கருத்துக்களைக் கற்றார். பின்னர் திருப்புட்குழியில் உள்ள யாதவ பிரகாசரிடம் வேதாந்தங்கள் பயின்றார். அதன் பின் சிறிது காலம் காஞ்சி வரதர் கோவிலில் கோயில் பணியாற்றினார். வேதாந்தங்களை நன்கு பயில திருவரங்கம் சென்று பெரிய நம்பி என்பவரிடம் மாணாக்கராக அமர்ந்தார். அவரிடம் வேதாந்தங்கள் நன்கு கற்றப் பின் "வசிஷ்டாத்வைத்வம்" என்ற வைணவப் பிரிவை ஏற்படுத்தினார். ஆதி சங்கரரின் மாய வாதத்தை (அத்வைதம்) கடுமையாக எதிர்த்தார். பக்தி வழியிலான மார்க்கத்தைப் போதித்தார். உயிர்கள், உலகம், இறைவன் என்ற மும்முனைக் கருத்தை உருவாக்கினார். திருவரங்கத்தில் பல மடங்களை

நிறுவியும், அங்குள்ள கோயிலையும் செம்மைப்படுத்தினார்[19]. மிகுந்த மனித நேயப் பற்றாளராகவும், சமய சீர்த்திருத்தவாதியாகவும், சமரச சமய நோக்கமுடையவராகவும் திகழ்ந்தார். எல்லா இனத்தவரும் (தாழ்த்தப்பட்டவர் உட்பட) பாகவதர் ஆகலாம் என்று கூறி புரட்சி வித்தை விதைத்தார். வேதாந்தத்துக்கு பக்தி வழியிலான விளக்கமளித்தார். இந்தியா முழுவதும் பயணம் செய்து தன் கருத்துக்களைப் பரப்பினார். இவரது வழியை அக்காலத்தில் 74 மடாதிபதிகளும், 700 ஏகாங்கிகளும், 10000 பாகவதர்களும் பின்பற்றினர் என்றுரைப்பர். இவரது புரட்சி கருத்துக்கள் ஜாதி இந்துக்களிடையேயும், அரசினரிடமும் ஆத்திரத்தையும், வெறுப்பையும் மூட்டின. கடும் எதிர்ப்பு தோன்றியதையடுத்து சோழநாடு நீங்கி மைசூரில் உள்ள திருநாராயணபுரம் சென்று அங்கு பணியாற்றினார். சில காலம் கழித்து மீண்டும் திருவரங்கம் திரும்பி தன் வாழ்நாள் முழுவதும் சமயப் பணியாற்றினார். வைணவ சமயத்தை நாடு முழுவதும் பரப்பிய பெருமை இவரையேச் சாரும். இவர் வழியில் வந்த "ஏகதண்டிகள்" என்ற வைணவ சந்நியாசிகள் வைணவ சமயத்தைப் பரப்பும் பணியை தீவிரமாக மேற்கொண்டனர்.[20]

முடிவுரை:

இந்தியாவில் உள்ள புராதன சமய பிரிவுகளில் வைணவமும் ஒன்று. அது தமிழ்நாட்டில் வளர்வதற்குச் சோழ மன்னர்கள் பெரிதும் உதவினர். அவர்கள் அளித்த ஆக்கத்தாலும், வழங்கிய ஆதரவாலும், கொடுத்த கொடைகளாலும், எடுத்த கோயில்களாலும் வைணவம் தன் பொற்காலத்தை எட்டியது. சோழ மன்னர் ஆதரவின்றி வைணவம் இத்துணை சிறப்பான வளர்ச்சியை எட்டியிராது என்பது திண்ணம். அவர்கள் எல்லா நிலையிலும் சைவத்துடன், வைணவத்தையும் பாகுபாடின்றி ஆதரித்து வந்ததை ஏராளமான சான்றுகள் உணர்த்தும். வைணவத்திற்கும், சைவத்திற்கும் சிறு சிறு பூசல்கள் ஏற்பட்ட போதெல்லாம் சோழ மன்னர்கள் நடுநிலையில் நின்று சமயப் பிணக்கை தீர்த்து வைத்தனர். இக்காலத்தில்தான் இராமானுஜர், நாதமுனிகள், வேதாந்த தேசிகர் போன்ற வைணவப் பெரியார்கள் தோன்றி வைணவ சமயத்தைப் நாடு முழுவதும் பரப்பினர். வைணவ சமயம் நன்கு வளர்வதற்கு உரிய சூழலைச் சோழ மன்னர்கள் உருவாக்கி அளித்தனர், முன் எப்போதும் இருந்திராத அளவு வைணவ சமயம் சிறப்பு பெறுவதற்குச் சோழநாட்டு மன்னர்கள், உயர்குடியினர், சமயப் பெரியோர்கள், பொதுமக்கள் போன்ற அனைத்து தரப்பினரின் ஆக்கமும், ஊக்கமுமே முதன்மையான காரணமாய்த் திகழ்ந்ததென்றால் அது மிகையாகாது.

விரிவாக்கம்:

[1] ARE-Annual Report on Indian Epigraphy

[2] SII-South Indian Inscriptions

[3] Epi.Gra.Ind-Epigraphica Indica

[4] M.E.R.-Madras Epigraphical Report

அடிக் குறிப்புகள்:

[1] A.R.E.No:78/1920

[2] Neelakanta Sastri.K.A, The Colas.P:639

[3] A.R.E.No:181/1923

[4] A.R.E.No:61/1892

[5] A.R.E.No:205/1904

[6] S.I.I.Vol:5.No:57

[7] A.R.E.No:245/1934-35

[8] A.R.E.No:343/1921

[9] A.R.E.No:337/1919

[10] A.R.E.No:176/1919

[11] A.R.E.No:123/1900

[12] A.R.E.No:635/1919

[13] Epi.Gra.Ind.Vol:15.No:34

[14] M.E.R.No:258/28

[15] M.E.R.No:127/25

[16] பிள்ளை.கே.கே, சோழர் வரலாறு.ப:614

[17] Neelakanta Sastri.K.A, The Colas.P:638

[18] பாலசுப்பிரமணியம்.மா,சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு, (பாகம்:II), ப:370

[19] Krishnaswami Aiyangar.S, Sri Ramanujacharaya, P:24

[20] M.E.R.No:544/11

பார்வை நூற்பட்டியல்:-

[1] Neelakanta Sastri.K.A, (1975), The Cholas, Chennai: University of Madras,

[2] Neelakanta Sastri.K.A, (1939), Studies in Cola History and Administration, Chennai: University of Madras, Chennai.

[3] Pillai.K.K, (1975), A Social History of The Tamils, Chennai: University of Madras.

[4] Swaminathan.A, (1991), Social and Cultural History of Tamil Nadu, Chennai: Deepa Publications.

[5] Krishnaswami Aiyangar.S, Sri Ramanujacharaya-A Sketch of His Life and Time, Chennai: G.A.Natesan & Co Publishers.

[6] பிள்ளை.கே.கே. (1977), தமிழ் நாட்டு வரலாறு- மக்களும் பண்பாடும், சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

[7] சதாசிவப் பண்டாரத்தார்.தி.வை, (2008), பிற்காலச் சோழர் சரிதம், சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

[8] பிள்ளை.கே.கே. (1997), சோழர் வரலாறு, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

[9] பாலசுப்பிரமணியம்.மா, (1979), சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு, சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.